**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No. 262/2019**

**வழக்கு சாட்சி – அ.சா. 8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லதா | ஜாதி | |
| தந்தை / கணவர் பெயர் | முத்துப்பாண்டி | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | மதுரை | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | மதுரை | வயது | 42/25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 07.04.2019 அன்று எனது அக்காவின் மகள் பவித்ராவின் வளைகாப்புக்காக தேனியில் இருந்து போடிக்கு 21 நபர்கள் வேனில் சென்றுவிட்டு திரும்பி வரும்போது மேற்கில் இருந்து கிழக்காக வந்துகொண்டிருக்கும்போது மதியம் 2.15 மணியளவில் தீர்த்தத்தொட்டி அருகில் PPP என்று பெயரிடப்பட்ட 7330 என்ற எண் கொண்ட பேருந்து அதிகவேகமாக கட்டுப்பாடு இல்லாமல் வந்து நாங்கள் சென்றுகொண்டிருந்த வேன் மீது மோதியது. அதில் எங்களது வேன் 4–5 முறைகள் சுழன்று விழுந்தது. விபத்தில் சம்பவ இடத்திலேயே வெற்றியரசன், சிற்றரசன், சரஸ்வதி, பேச்சியம்மாள் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் லீட்டா என்பவர் இறந்தவிட்டார். எனக்கு விபத்தில் பித்தப்பை வெடித்துவிட்டது. கை உடைந்து பிளேட் வைத்துள்ளேன். சுபா என்ற

நபருக்கு கை, கால் மற்றும் தலையில் அடிபட்டு கண் பார்வை தெரியாமல் போய்விட்டது. ஒரு வாரம் கழித்து சிகிச்சைக்கு பின்னர் அவருக்கு கண் பார்வை திரும்பியது. ராஜேஸ்வரி என்பவருக்கு இடுப்பு தண்டுவடத்தில் காயம் ஏற்பட்டது. பாக்கியலட்சுமிக்கு தலை மற்றும் உடலில் பல இடங்களில் காயம் ஏற்பட்டது. கலாவதிக்கு தலை, தொடை, கைகளில் காயம் ஏற்பட்டது. லித்திசா என்ற சிறுமிக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது. மேலும் வாகனத்தில் வந்த கவிதா, விஜயக்குமார், கருப்பாயி மற்றும் சில நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்ட எங்களை க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் முத்துலாபுரத்தைச் சேர்ந்த நபர் கண்ணன். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். (**எதிரியின் அடையாளம் பற்றி எதிரி தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை.** )

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை எனக் கருதி முடிக்கப்பட்டது.